ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1819/8 - 2013 ජූලි මස 16 වැනි අඟහරුවාදා - 2013.07.16

*1819/8 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு யூலை மாதம் 16 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 104/44.*

**(87 ஆம் அத்தியாயமான) நம்பிக்கைப் பொறுப்புக்கள் கட்டளைச் சட்டம்**

*114 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

"ரிடெம்ரோறிஸ் பிதாக்கள்" நம்பிக்கைப் பொறுப்பாளர்கள், அதாவது -

1. வண. பிதா பிரான்சிஸ் நீல் டயஸ் கருணாரட்ன,
2. வண. பிதா அம்பகாகஹே சனத்குமார பெர்னாண்டோ,
3. வண. பிதா கம்பொலவாதுகே அன்டன் சிரான் பொன்சேகா,
4. வண. பிதா வர்ணகுலசூரியா ருவுஸ் ஜவான் பெர்னாண்டோ,
5. வண. சகோ. பற்றிக் யோசேப் இம்மானுவல் பெரேரா,
6. வண. பிதா பிலிப் பௌற்றியஸ் அந்தோனி மலவியாராச்சி,
7. வண. பிதா சாந்தி ஜெராட் றக்ஸ்டான் அபேயசிங்க,
8. வண. பிதா டெஸ்மன்ட் விமல் அந்தோனி திரிமன்ன,
9. வண. பிதா அமரசிங்க ஆராச்சிகே கிறிஸ்தோபர் றொஹான் பெரேரா,
10. வண. பிதா பொடிப்பிலி ஆராச்சிகே சந்தன சஞ்ஜீவ குமார் பெரேரா.

ஆகியோர் (87 ஆம் அத்தியாயமான) நம்பிக்கைப்பொறுப்புக்கள் கட்டளைச் சட்டத்தின் 114 ஆம் பிரிவின் கீழ், நீதி அமைச்சருக்கு அவர்களது கூட்டிணைப்புக்கென விண்ணப்பித்துள்ளார்களாதலால்,

ஆகவே, இப்போது, மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், இக்கட்டளை மூலம் சொல்லப்பட்ட நம்பிக்கைப்பொறுப்பாளர்களின் கூட்டிணைப்புக்கு அதிகாரமளிக்கின்றேன் என்பதுடன், பின்வரும் பணிப்பையும் வெளிப்படுத்துகையையும் செய்கின்றேன்: -

(அ) மேலே பெயர் குறிப்பிடப்பட்ட சொல்லப்பட்ட நம்பிக்கைப்பொறுப்பின் நம்பிக்கைப் பொறுப்பாளர்களும், சொல்லப்பட்ட நம்பிக்கைப்பொறுப்பு விதிகளின் கீழும் அத்துடன் கண்டி/மாத்தளையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு சேகு பாரிட் மொஹமட் சவாகிர் என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2011 ஆம் ஆண்டு ஒற்றோபர் 28 ஆந் திகதிய 2489 ஆம் இலக்கத்தைக் கொண்டுள்ள நம்பிக்கைப்பொறுப்பு வெளிப்படுத்துகையின் கீழும் அப்போதைக்கு முறையாக நியமிக்கப்பட்டவர்களான அவர்களது பின்னுறுவோரும் "ரிடெம்ரோறிஸ் பிதாக்கள்" என்னும் பெயர் மகுடத்தின் கீழ் இடையறா வழியுரிமையையும் பொது இலச்சினையையும் கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் ;

(ஆ) சொல்லப்பட்ட நம்பிக்கைப்பொறுப்பாளர்கள், சொல்லப்பட்ட பெயர்மகுடத்தின் கீழ் சொல்லப்பட்ட நம்பிக்கைப்பொறுப்பின் சார்பில் ஏதேனும் விவரணத்தினதான அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்வனவு செய்யலாம், பெற்றுக்கொள்ளலாம். வைத்திருக்கலாம், கடனாக எடுக்கலாம் அல்லது வேறு வகையில் கொள்ளலாம், விற்கலாம், கொடுத்து மாற்றலாம், ஈடுவைக்கலாம், அடைமானம் வைக்கலாம், குத்தகைக்கு விடலாம் அல்லது வேறு வகையில் கையுதிர்க்கலாம் ; அத்துடன்

(இ) நம்பிக்கைப்பொறுப்பாளர்கள் சொல்லப்பட்ட நம்பிக்கைப்பொறுப்புத் தொடர்பில் எழுதுகின்ற எல்லா வழக்குகளிலும் வழக்கெழு காரணங்களிலும் சொல்லப்பட்ட பெயர்மகுடத்தைக் கொண்டு இலங்கையில் அல்லது வேறெங்காயினுமுள்ள ஏதேனும் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுப்பதற்கும், வழக்குத் தொடுக்கப்படுவதற்கும், விடை பகர்வதற்கும் விடை பகரப்படுவதற்கும், எதிர்வாதிடுவதற்கும் எதிர்வாதிடப்படுவதற்கும் சட்டப்படி இயலுமானவர்களும் தகுதியுடையவர்களுமாதலும் வேண்டும்.

இக்கட்டளை எனக்கு அவசியமானதெனத் தோன்றக்கூடியவாறான அத்தகைய முறையில் இல்லாதொழிக்கப்படலாம், அல்லது காலத்துக்குக் காலம் வேறுபடுத்தப்படலாம் அல்லது திருத்தப்படலாம்.

ரவூப் ஹக்கீம்,
நீதி அமைச்சர்.

கொழும்பு,
*2013, யூலை 15.*

*8- 81*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.